# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO. - 152/2018
P.W.2 - புஷ்பா க/பெ.தாமோதரன்
DATE - 10.07.2023.

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 6 முதல் 9 வரை தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

தாவா சொத்துகளில் பிரதிவாதிகள் 6 முதல் 9 வரையானவர்களுக்கு ஒரு பாகம் உள்ளது என்றால் சரி தான். முதல் பிரதிவாதி தாவா சொத்துகள் அல்லாமல் தனியாக வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரி தான். லாரிகளை வாடகைக்கு விட்டு அதன் மூலம் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரி தான். சரக்குகளை கமிஷன் அடிப்படையில் விற்பனை செய்யும் வியாபாரமும் செய்து வந்தார் என்றால் சரி தான். மேற்படி வியாபாரங்களை மண்டி தெருவில் உள்ள சராப் குமாரசாமி செட்டியார் தர்மசத்திரம் என்ற கட்டிடத்தில் வாடகைக்கு எடுத்து செய்து வந்தார் என்றால் சரி தான். அந்த வியாபாரம் மூலம் வந்த வருமானங்களை அந்த தாவாவில் காட்டவில்லை என்றால் சரி தான். முதல் பிரதிவாதிக்கு ரஜேந்திரன் என்பவர் உதவி செய்து வந்தார் என்றாலும் அதன் பிறகு 3வது பிரதிவாதி ராஜேஷ்குமார் அந்த வியாபாரத்தை நடத்தி வந்தார் என்றால் சரி தான். அந்த வியாபாரத்தில் வந்த லாபத்தில் பிரதிவாதிகள் 6 முதல் 9 வரையானவர்களுக்கும் பங்கு உள்ளது என்றால் சரி தான். பிரதிவாதகள் 6 முதல் 9 வரையானவர்களுக்கு தாவா சொத்தில் ஒரு பாகம் கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரி தான். என்னுடைய தாயாரின் சொத்துகளிலும் பிரதிவாதிகள் 6 முதல் 9 வரையானவர்களுக்கு ஒரு பாகம் உள்ளது என்றால் சரி தான்.

P REVATHY Digitally signed by P REVATHY

**Additional District Judge (FTC),**

Vellore.